**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.280/2013**
**Prosecution Witness : 4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சூர்யகலா | **Caste** | : |
| **Husband Name** | : மணிகண்டன் | **Calling** | : சார்பு ஆய்வாளர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 37/2026 |
| | | **Dated** | : 21.08.2026 |

**21.08.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

கூடுதல் சாட்சி–1 **திருமதி.சூர்யகலா** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர்.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 2013ம் தேதி சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த கோபாலகிருஷ்ணனின் கையொப்பம் கையெழுத்து நன்கு பரிட்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 02.03.2013ம் வருடம் மாலை 15.15 மணிக்கு திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சில்வியா ஜாஸ்மின் என்பவர் நகர் வடக்கு காவல் நிலையத்தில் நிலையம் ஆஜராகி அப்போது பொறுப்பில் இருந்த நகர் வடக்கு காவல் சார்பு ஆய்வாளர் கோபால கிருஷ்ணனிடம் கொடுத்த புகாரினைப்பெற்று நிலைய குற்ற எண்.163/2013 சட்டப்பிரிவு 147,353,506(i) IPC ஆக பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார். பின்பு 02.03.2013ம் தேதி 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் இன்னேசியஸ் இன்பராஜ், சகாயராஜ் ஆகியோர்களை விசாரித்து மாதிரி வரைபடம் , பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் சார்பு ஆய்வாளர் சில்வியா ஜாஸ்மின் , சார்பு ஆய்வாளர் மனோகரன், சிறப்பு சார்பு ஆய்வாளர் கந்தசாமி, தலைமைக்காவலர் செல்வம் , பெண் தலமைக்காவல் ஆய்வாளர் மஞ்சுளா, காவலர் அழகம்மாள் , குமார் ஆகியோரை விசாரித்து சம்பவ சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரியவர எதிரிகளைத்தேடிவந்த நிலையில் எதிரி திண்டுக்கல் ரவுண்ட் ரோடு விஜயன் பேக்கரி முன்பு நின்று கொண்டிருந்தபோது எதிரிகள் A1- அருண்குமார், A3- தினேஷ் குமார் ஆகியோர்களை காலை 9.30 மணிக்கு கைது செய்து 10.00 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து தக்க பிணைய தாரருடன் எதிரிகளை விடுவித்தார்.

எதிரி A2- பொன்ராஜ் என்பவரை காட்டாஸ்பத்திரி அருகே நின்று கொண்டிருந்தவரை 12.45 மணிக்கு கைது செய்து நிலையம் அழைத்துவந்து வைத்து தக்க பிணைய தாரருடன் எதிரியை விடுவித்தார். A4,A5 ஆகிய எதிரிகள் மாவட்ட நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்று வெளியே சென்றுள்ளார்கள். 15.05.2013ம் தேதி எதிரிகள் எதிராக சட்டப்பிரிவு 147,353,506(i) IPC கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் சாட்சிகள் காவல் நிலையத்தில் பணிபுரிபவர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியில் இருந்ததற்கு எந்த விதமான GD entryயை முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரிதான்.

காவல் நிலைய குற்றஎண்.77/2013 என்ற வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற அறிக்கை எதையும் இவ்வழக்கில் முன்னிலைப்படத்தவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் CCTV வீடியோ ஆதாரம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார்தாரர் சம்பவத்தை பற்றி எந்த உயர்அதிகாரியிடம் தெரிவித்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி தாலுகா காவல் நிலையத்தில் கையொப்பம் செய்ய வந்த கையொப்ப நோட்டையோ அல்லது முன்பிணை உத்தரவையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் தனிநபர் சாட்சியாக யாரையும் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

சம்பவம் நடந்த போது கூட்டமாக வந்தார்கள் என்றும் எங்கு எங்கு இருந்தார்கள் என்று விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் என்றாலும் எதிரிகளை சொன்ன நாள் நேரத்தில் கைதுசெய்யவில்லை என்றாலும் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டு எதிரிகள் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.21 17:12:12 +0530

Judicial Magistrate No.II

Dindigul.